**வருகின்ற 2018-ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

1. பவானி நகராட்சியில் உள்ள 12641 சொத்துவரி விதிப்புகளில் 11386 வரி விதிப்புகள் குடியிருப்பு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குடியிருப்புகளில் இன்றைய நாள் வரை 4994 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6392 வரி விதிப்புதாரர்கள் குடிநீர் இணைப்பு பெற விண்ணப்பிக்காமல் உள்ளனர்.

இணைப்பு பெற விண்ணப்பிக்காத அனைவருக்கும் இந்நகராட்சி பகிர்மானக் குழாய் முதல் வீட்டின் உட்புறம் வரை குழாய் அமைத்து (Internal pumping flow control valve and meter) மற்றும் தேவையான உபகரணங்கள் பொருத்தி இணைப்பு வழங்கி அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை நகராட்சி மூலம் வழங்க மதிப்பீடு ரூ. 590.00 இலட்சம் (ரூபாய் ஐந்நூற்று தொண்ணூறு இலட்சம் மட்டும் முன்வைப்புத் தொகை நீங்கலாக) தயாரிக்கப்பட்டு அரசின் மானியம் வேண்டி கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பவானி நகராட்சியில் போதிய நிதி இல்லாததால் மதிப்பீட்டு தொகை ரூ.590இலட்சம் அரசின் முழு மானியம் பெற்று செயல்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்: 361/2018/இ1

2. ஒருங்கினைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-2017ன் கீழ் பவானி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு தேவையான வாகனங்கள் வாங்கவும் மற்றும் உரக்கிடங்கில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் 8 எண்ணிக்கை பணிகள் ரூ.218 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.11088-25/2017/பி3, நாள். 24.05.2017-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று வ.எண்.1 முதல் 5 வரை உள்ள பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. வ.எண்: 6 மற்றும் வ.எண். 7ல் கண்டுள்ள இரண்டு பணிகளும் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 85.75 + 46.70 = 132.45 இலட்சம்) பல்வேறு காரணங்களால் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து இரண்டு பணிகளை இரத்து செய்துவிட்டு நகரில் இரண்டு இடங்களில் சிறுஉர மையம்(MCC) மற்றும் ஒரு திடக்கழிவிலிருந்து மறுசுழற்சி பொருட்கள் பிரித்தெடுத்தல் மையம் (RRC) ஆகியவற்றினை அமைப்பது சிறந்த தீர்வாக இருக்கும் என உத்சேிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்: 5 நாள்:31.01.2018ன் படி திருத்திய நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு முன் மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது.

| S.No. | Name of Work | Estimate |
|---|---|---|
| 1. | **Construction of municipal Soild Waste processing Facilities including** | |
| | i) Construction of Compost plat form | 37.50 |
| | ii) Construction of 1/3rd roof for compost plat form | 26.25 |
| | iii) Providing leachate Collection System | 4.00 |
| | iv)Processing machinery Shed | 18.00 |
| | **SUB TOTAL** | **85.75** |
| **2.** | **(i) Construction of Manure Godown** | 2.50 |
| | ii) Construction of Administration office | 5.00 |

| | | |
|---|---|---|
| | iii) Construction of Watchman Shed | 2.00 |
| | iv) Constructio0n of Vehicle Shed | 1.50 |
| | v) Construction of Labour rest room | 8.00 |
| | vi) Providing Water Supply arrangements | 5.00 |
| | vii) Providing Lighting arrangements | 4.00 |
| | viii) Construction of Strom water drain | 5.00 |
| | ix) Construction of Internal Road | 5.70 |
| | x) Constructuion of Compound Wall | 6.00 |
| | xi) Providing Green Belt | 2.00 |
| | **SUBTOTAL** | **46.70** |
| | **TOTAL** | **132.45** |

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: 24641/பி3/2016/ நாள்: 17.03.2018ல் மேற்கண்டுள்ள இரண்டு பணிகளை இரத்து செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள மூன்று பணிகள் மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இரத்து செய்யப்பட்டுள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை இரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| S. No | Location | Existing Area Sq.m | Capacity per plant MT | MCC consumed area | Estimated Cost (Rs.in lakh) |
|---|---|---|---|---|---|
| 1. | Construction of Micro compost centre at compost yard in ward no. 4 | 16066 | 5.0 | 550sq.m | 58.59 |
| 2. | Construction of Micro compost centre at Burial Ground in ward No. 11 | 6657 | 5.0 | 550sq.m | 55.59 |
| 3. | Construction of Resource Recovery centre at Amman Layout in ward no. 17 | 294 | 10 | 150sq.m | 18.27 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1240/2016/இ1)

3. ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-2017ன் கீழ் பவானி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு தேவையான வாகனங்கள் வாங்கவும் மற்றும் உரக்கிடங்கில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் 8 எண்ணிக்கை பணிகள் ரூ.218 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.11088-25/2017/பி3, நாள். 24.05.2017-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று வ.எண்.1 முதல் 5 வரை உள்ள பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. வ.எண்: 6 மற்றும் வ.எண். 7ல் கண்டுள்ள இரண்டு பணிகளும் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 85.75 + 46.70 = 132.45 இலட்சம்) பல்வேறு காரணங்களால் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து இரண்டு பணிகளையும் இரத்து செய்துவிட்டு நகரில் இரண்டு இடங்களில் சிறுஉர மையம்(MCC) மற்றும் ஒரு திடக்கழிவிலிருந்து மறுசுழற்சி பொருட்கள் பிரித்தெடுத்தல் மையம் (RRC) ஆகியவற்றினை அமைப்பது சிறந்த தீர்வாக இருக்கும் என உத்சேிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்: 5 நாள்:31.01.2018ன் படி திருத்திய நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு முன் மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது.

| S.No. | Name of Work | Estimate | Work Status |
|---|---|---|---|
| 1. | Purchasing of push carts-40 Nos | 8.00 | Completed |
| 2 | Purchasing of Compactor bins-54 Nos | 21.60 | |
| 3 | Purchase of Primary and Transportation Vehicles Light commercial Vehicle 2cu.m capacity ( 4 Wheeler Tipper Auto) | 7.50 | |
| 4 | Purpose Of Secondary and Transportaion Vehicles Mini Tipper (8.5 Cu.m capacity) | 16.00 | |
| 5 | Purchase of compactor ( 7 cu.m capacity) | 27.00 | |
| 6. | Construction of municipal Soild Waste processing Facilities including | | Work Not Started |
| | i) Construction of Compost plat form | 37.50 | |
| | ii) Construction of 1/3rd roof for compost plat form | 26.25 | |
| | iii) Providing leachate Collection System | 4.00 | |
| | iv)Processing machinery Shed | 18.00 | |
| | SUB TOTAL | 85.75 | |
| 7. | (i) Construction of Manure Godown | 2.50 | Work Not Started |
| | ii) Construction of Administration office | 5.00 | |
| | iii) Construction of Watchman Shed | 2.00 | |
| | iv) Constructio0n of Vehicle Shed | 1.50 | |
| | v) Construction of Labour rest room | 8.00 | |
| | vi) Providing Water Supply arrangements | 5.00 | |
| | vii) Providing Lighting arrangements | 4.00 | |
| | viii) Construction of Strom water drain | 5.00 | |
| | ix) Construction of Internal Road | 5.70 | |
| | x) Constructuion of Compound Wall | 6.00 | |
| | xi) Providing Green Belt | 2.00 | |
| | **SUBTOTAL** | **46.70** | |
| 8. | Information Education and communication component | 5.45 | |
| | **TOTAL** | **218.00** | |

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: 24641/பி3/2016/ நாள்: 17.03.2018ல் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S. No | Location | Existing Area Sq.m | Capacity per plant MT | MCC consumed area | Estimated Cost (Rs.in lakh) |
|---|---|---|---|---|---|
| 1. | Construction of Micro compost centre at compost yard in ward no. 4 | 16066 | 5.0 | 550sq.m | 58.59 |
| 2. | Construction of Micro compost centre at Burial Ground in ward No. 11 | 6657 | 5.0 | 550sq.m | 55.59 |
| 3. | Construction of Resource Recovery centre at Amman Layout in ward no. 17 | 294 | 10 | 150sq.m | 18.27 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1240/2016/இ1)

(ஒம்) ரா.மகேஸ்வரி,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்(கூ/பொ)
பவானி நகராட்சி

**வருகின்ற 2018-ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

2018-19 -ம் ஆண்டுக்குரிய குத்தகை இனங்கள் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் புதிய பேருந்து நிலையத்தில் தகரப்பெட்டி வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம் ( 6 கடைகள்) கடை 1-க்கு ஆண்டு குத்தகை சராசரியாக தொகை ரூ.6 000/- மட்டுமே உள்ளது. இதனது வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ. 25000 + 10000 அதிகமாக இருப்பதால், ஏற்கனவே உள்ள வைப்புத் தொகை ரூ. 16000/- (2015-16-ல் நிர்ணயம் செய்தது) கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்தும், பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டண வசூல் செய்வதற்கு ரூ.75000 +5000/- வைப்புத் தொகை கீழ்கண்டவாறு:

| | | |
|---|---|---|
| இனம்: 6<br>புதிய பேருந்து நிலையத்தில் தென்புறம் தகரப்பெட்டி வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம் | வைப்புத் தொகை<br>ரூ.11000/- | கூடுதல் வைப்புத் தொகை<br>ரூ.5000/- |
| இனம்: 9<br>பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | ரூ. 60000/- | ரூ.30000/- |

மேற்படி குத்தகை இனங்களுக்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன் வராததால் நகராட்சியின் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட வைப்புத் தொகையை நிர்ணயம் செய்யலாம். மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1707/2017/அ2)

(ஒம்) ரா.மகேஸ்வரி,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்(கூ/பொ)
பவானி நகராட்சி

**வருகின்ற 2018-ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

1. தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள்: 25.01.2018 நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7234/14/ஆர்1, நாள்: 15.03.2018 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் 16.03.2018 தேதிய ஆய்வு கூட்ட அறிவுரை.

கல்வி உபயோகத்திற்காக இயங்கி வரும் தனியார் பள்ளி கட்டிடங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ( சுய நிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து ) அவை தொடர்பான விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி சொத்துவரி விதிப்பு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு அரசு நாளிதழ் சென்னை நாள்:25.01.2018 (Part iv- section .2 Tamil nadu acts and ordinate) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.404/2018/அ1)

2. பவானி நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள குப்பைக் கிடங்கில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டுள்ள பழைய கழிவுகள் அதிக அளவில் உள்ளதால் புதிதாக கொண்டு வரப்படும் கழிவுகளை உரம் தயாரிப்பதற்கான பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தூய்மை இந்தியா திட்டம் முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட குறிப்புகளின் படி பழைய கழிவுகளை பயோமைனிங் முறையில் அப்புறப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் பழைய கழிவுகளை பயோமைனிங் முறையில் அப்புறப்படுத்த ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டில் முன் மொழிவுகள் தயார் செய்துள்ளமைக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி உதவிகோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க. எண்: 557/2018/இ1)

3. இந்நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் அறை கட்டுதல் (Special Shelter) பணிக்கு முதலாம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு, அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் குறல் தமிழ் தினசரி நாளிதழில் 03.03.2018ல் இந்நகராட்சியின் முதலாம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டு Newsmer Associates Limited Chennai அவர்களிடம் இருந்து வரப்பெற்ற கேட்பு பட்டியல் கீழ்க்கண்டுள்ளவாறு

| பட்டியல் எண் | நாள் | தொகை |
|---|---|---|
| 045/2018-19MK | 03.03.2018 | ரூ. 9,475/- |

மேற்படி தொகை ரூ.9,475/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க. எண்: 1333/2014/எச்1)

4. இந்நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு வரவு, செலவு திட்டத்தின் கீழ் 2018-19-ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள், பாரங்கள் கூட்டுறவு அச்சகத்தில் வாங்கிக் கொள்ளவும் அதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் தொகை ரூ. 6.00 ( ஆறு இலட்சத்திற்கு) பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம் (ந.க.எண்.463/2018/டி2)

5. இந்நகராட்சிக்கு சொந்தமான 2018-19 -ம் ஆண்டுக்குரிய ஏலம்போகாத குத்தகை இனங்களுக்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 21.03.2018-ல் கோரப்பட்டதில் புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.175000/- கோரப்பட்டதில் மற்றும் 28.03.2018-ல் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.142000/- கோரப்பட்டது. இவ்விரு இனங்களும் தனி அலுவலரின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை இனம் | உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர்/ முகவரி | மூன்றாண்டு சராசரி | 2017-18 குத்தகை தொகை |
|---|---|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | திரு. சிங்காரவேலன் த/பெ. கிருஷ்ணசாமி 49. வடக்குவீதி குருப்பநாயக்கன்பாளையம் பவானி | ரூ.146906/- | ரூ.154130/- |
| 2 | பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | திரு. சீரங்கன் த/பெ. செங்கோடன் 97/111,சொக்காரம்மன் நகர், பவானி. | ரூ.118744/- | ரூ.124582/- |

நிபந்தணைகள்:

1. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கண்ட இனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் பொது ஏலத்தில் விடப்படும்.
2. மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்ப கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வினத்தை பெறவும் வாரிசுதாரர்களுக்கு விருப்பமில்லை எனில் உரிமை மறு ஏலம் விடப்படும்.
3. வருமான வரி, தொழில்வரி ஆகியவற்றினை குத்தகை தொகையில் கழித்து கொள்ள இயலாது. இதனை உடன் செலுத்தப்பட வேண்டும்.
4. 2018-19 ம் ஆண்டு குத்தகை பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை மீறி நடந்தால் குத்தகை உரிமம் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படுவதுடன் அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு குத்தகைதாரர் பொறுப்பாவார்.

மேற்கண்ட நிபந்தணைகளுடன் உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

6. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண். 22,36 ஆகிய கடைகளை 2016-17-ம் ஆண்டு வரை நடத்தி வந்துள்ளார். மேற்படி கடை எண். 36-ஐ மார்ச் 10/2017லும் கடை எண்.22 ஐ ஜீன் 2016 -லும் நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டார். மேற்படியார் அவருடைய டெபாசிட் மற்றும் அட்வான்ஸ் தொகையை திருப்பி வழங்ககோரியுள்ளதால் அவருடைய வைப்புத் தொகை ரூ.63400/- காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளது. மேற்கண்ட 2 கடைகளுக்கும் வாடகை நிலுவை ஏதுமில்லை. தொழில்வரி 2016-17 இரண்டாம் அரையாண்டு வரை ரூ.2266/- நிலுவை உள்ளது.

எனவே தொழில்வரி ரூ. 2266/-ஐ பிடித்தம் செய்துவிட்டு மீதமுள்ள தொகை ரூ.61134ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

7. பவானி நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு வாடகையுடன் சேர்த்து வசூல் செய்யும் சேவை வரி GST 18% தொகையை மாதாமாதம் மத்திய கலால் வரி அலுவலகத்திற்கு Online –ல் Return Filing செய்ய வேண்டியிருப்பதால் அதற்கான கட்டணம் ஆடிட்டருக்கு செலுத்த வேண்டியுள்ளது. எனவே உத்தேச செலவினம் தொகை ரூ.60,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

8. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் Gas Chlorination Plant அமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. அதனால் Gas Chlorination செய்ய தேவைப்படும் குளோரின் சிலிண்டர்கள் வாங்கி உபயோகப்படுத்த ஒரு வருடத்திற்கு உத்தேச செலவு ரூ.2.00 இலட்சம் ஆகும். எனவே வருடாந்திர அடிப்படையில் குளோரின் சிலிண்டர் தேவைப்படும் சமயங்களில் வாங்கி உபயோகப்படுத்தும் பணியினை மேற்கொள்ளவும், செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்

9. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரில் குளோரினேசன் செய்ய Liquid Chlorination Plant அமைக்கப்பட்டு Hypo Chloride Solution பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகரில் அனைத்து பகுதிகளிலும் குடிநீரில் Residual குளோரின் கிடைப்பதற்கு தலைமை நீரேற்று நிலையத்தில் Primary Chlorination மற்றும் குடிநீர் மேல்நிலைத்தொட்டியில் Secondary Chlorination செய்யப்பட வேண்டும் எனவே தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக gas Chlorination Plant அமைக்கவும் நான்கு மேல்நிலைத் தொட்டிகளுக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Liquid Chlorination Plant-களை இடமாற்றம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக Gas Chlorination Plant அமைக்க உத்தேசமாக ரூ. 5.00 இலட்சம் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.

10. இந்நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் 1990 ஆண்டு கட்டப்பட்டது. இது தற்போது மிகவும் பழுதடைந்து உள்ளது. கட்டிடத்தின் மேற்கூரை கான்கிரீட்டின் அடிபகுதி ஆங்காங்கே பெயர்ந்து கீழே விழுகின்றது. இதனால் அங்கு வந்து செல்லும் பொது மக்கள் மிகவும் அச்சப்படுகின்றனர் மற்றும் ACC மேற்கூரை பழுதடைந்து ஆங்காங்கே மழைநீர் கொட்டுகிறது. மழைநீர் வடிந்து செல்ல மழைநீர் வடிகால் குழாய்கள் பழுதடைந்துள்ளது. கான்கிரீட்டின் மேற்கூரையின் மேல் உள்ள Weathering Course மற்றும் Pressed tiles பழுதடைந்துள்ளதால் மழைநீர் கான்கிரீட்டினுள் புகுந்து கான்கிரீட்டின் கடினத் தன்மையை சேதப்படுத்துகின்றது. எனவே இதனை பழுதுபார்க்க வேண்டியுள்ளது. புதிய பேருந்து நிலைய கட்டிடங்களுக்கு முழுமையான painting செய்ய வேண்டியுள்ளது. மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இப்பணியின் வருவாய் நிதியின் கீழ் பணி மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.344/2018/இ1)

11.தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பவானி நகராட்சி பகுதியில் கழிப்பிடங்கள் இல்லாத வீடுகள் மற்றும் கழிப்பிடங்கள் உள்ள வீடுகள் குறித்த கணக்கெடுப்பு பணி SBM திட்டத்தின் பணியாளர்களான பரப்புரையாளர்களை கொண்டு மேற்கொண்டதில் தனிநபர் கழிப்பிடங்கள் கட்ட இடவசதி உள்ள வீடுகள் மொத்தம் 23 என கண்டறியப்பட்டது. அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் (HFA)தின் கீழ் மேற்குறிப்பிட்ட 23 வீடுகளில் 12 வீடுகளில் கழிப்பிடத்துடன் கூடிய வகையில் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. மீதமுள்ள 11 வீடுகளில் 7 வீடுகளின் உரிமையாளர்கள் தங்கள் சொந்த செலவினத்திலேயே தனிநபர் கழிப்பிடங்கள் கட்டி முடித்து விட்டனர். மீதமுள்ள 4 வீடுகளின் உரிமையாளர்கள் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மானிய தொகையினை பெற்று தனிநபர் கழிப்பிடம் கட்ட விருப்பம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்: 2297/2009/பி3, நாள்: 08.03.2018-ல் இதற்கான செலவினத்தினை CSR Fund அல்லது ULB General Fund- லிருந்து செலவிட வேண்டும் எனவும், பின்பு SBM நிதியிலிருந்து தனிநபர் கழிப்பிடம் கட்டப்பட்டதற்கான மானிய தொகை ரூ.8000/-(ULB Share-Rs.2000/-, State Govt Share-Rs.2000/-, Central Share-Rs.4000/-) னை செலவிடவும், பவானி நகராட்சிக்கு தற்போதைய நிலையில் SBM- திட்டத்தின் கீழ் IHHL திருத்திய இலக்கு (Revised Target) 4 பயனாளிகள் என்பதனை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு கருத்துரு சமர்பிக்கவும் பயனாளிகளுக்கு மான்ய தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட்டு பின்பு SBM திட்ட நிதியிலிருந்து மீள பெற்றுக்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்ற அனுமதிக்கலாம்.
கூடுதலாகும் செலவு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டு பின்னர் SBM திட்ட நிதியிலிருந்து மீள பெற்றுக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1753/2015/எச்1)

12. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 02.03.2018 முதல் 12.03.2018 வரை நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளின்படி பவானி நகராட்சி எல்லைக்குள் சொத்துவரி விதிப்புள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் புதிய வீட்டுக் குடிநீர் இணைப்பு பெறுவதற்கு ரூ.2000/- வைப்புத் தொகை ஒரே தவணையில் செலுத்தப்படவேண்டியுள்ளது. நகர்புறத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நபர்கள் புதிய குடிநீர் இணைப்பு பெற்றுக் கொள்வதற்கு வசதியாக வைப்புத் தொகை ரூ.2000/-னை 4 சம தவணை முறையில் தவணை ஒன்றுக்கு 500வீதம் பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடியிருப்புகளுக்கு 4 சமதவணை முறையில் வைப்புத் தொகை ரூ.2000/-ஐ பெறவும் புதிய குடிநீர் இணைப்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.852/2018/இ1)

13. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 38038/ 2013/UPA2, நாள்: 31.01.2018-ன்படி 26.12.2017-ல் நடைபெற்ற நான்காவது திட்ட அனுமதிக்குழு கூட்டத்தில் தீன்தயாள் அந்தியோதயா யோஜானா திட்டத்தின் கீழ் ( DAY – NULM) ரூ. 49.00 இலட்சம் மதிப்பீட்டில் பவானி அரசு மருத்துவமனை வளாகத்தில் உட்புற நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் அறை ( Special shelter) கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு 20.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

ஒப்பந்ததாரர் திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் மற்றும் திருவாளர் ஸ்ரீ ஜெயம் கன்ஸ்ரக்சன் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது.

அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 26.03.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பெத்தாம்பாளையம் பெருந்துறை | ரூ. 49.00 | மதிப்பிட்டு விலை விகிதத்தை விட 9.59% அதிகம் |
| 2 | திருவாளர் ஸ்ரீ ஜெயம் கன்ஸ்ரக்சன்ஸ் திங்களூர், பெருந்துறை | | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 25.49% அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 9.59% அதிகமாக கொடுத்துள்ள திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 26.03.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் அவர்கள் தற்போது உள்ள கட்டுமான பொருட்களின் விலைவாசி ஏற்றம் மற்றும் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் 20.03.2018 அன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி

விகிதத்தில் 9.59% சதவீதம் குறிப்பிட்டுள்ளதை குறைத்து 4.82% சதவீதத்திற்கு செய்து தர 27.03.2018 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்கள்

ஒப்பந்ததாரர் திருவாளர் அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் அவர்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.82% சதவீதம் கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 4.82% சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மேற்கண்ட பணி திட்டபணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் ஏற்படுவதாலும் மாநில உள்ளாட்சித் துறை பொறியாளர்கள் கையேடு பகுதி 1 பாகம் 2.7.2-ன் படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவினத்தை ( 4.82% சதவீதம்) பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ஒம்) ரா.மகேஸ்வரி,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்(கூ/பொ)
பவானி நகராட்சி

**30.03.2018 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடை பெற்ற நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டத்தின் தீர்மானம் எண். 66 - ன் உண்மை நகல்**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 38038/ 2013/UPA2, நாள்: 31.01.2018-ன்படி 26.12.2017-ல் நடைபெற்ற நான்காவது திட்ட அனுமதிக்குழு கூட்டத்தில் தீன்தயாள் அந்தியோதயா யோஜானா திட்டத்தின் கீழ் ( DAY – NULM) ரூ. 49.00 இலட்சம் மதிப்பீட்டில் பவானி அரசு மருத்துவமனை வளாகத்தில் உட்புற நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் அறை ( Special shelter) கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு 20.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

ஒப்பந்ததாரர் திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் மற்றும் திருவாளர் ஸ்ரீ ஜெயம் கன்ஸ்ரக்சன் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது.

அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 26.03.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பெத்தாம்பாளையம் பெருந்துறை | ரூ. 49.00 | மதிப்பிட்டு விலை விகிதத்தை விட 9.59% அதிகம் |
| 2 | திருவாளர் ஸ்ரீ ஜெயம் கன்ஸ்ரக்சன்ஸ் திங்களுர், பெருந்துறை | | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 25.49% அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 9.59% அதிகமாக கொடுத்துள்ள திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 26.03.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் அவர்கள் தற்போது உள்ள கட்டுமான பொருட்களின் விலைவாசி ஏற்றம் மற்றும் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் 20.03.2018 அன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் 9.59% சதவீதம் குறிப்பிட்டுள்ளதை குறைத்து 4.82% சதவீதத்திற்கு செய்து தர 27.03.2018 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்கள்

ஒப்பந்ததாரர் திருவாளர் அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் அவர்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.82% சதவீதம் கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 4.82% சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ரக்சன்ஸ் அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மேற்கண்ட பணி திட்டபணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் ஏற்படுவதாலும் மாநில உள்ளாட்சித் துறை பொறியாளர்கள் கையேடு பகுதி 1 பாகம் 2.7.2-ன் படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவினத்தை ( 4.82% சதவீதம்) பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1333/2014/இ1)

**நகர்மன்ற தீர்மானம் எண். 66, நாள்: 30.03.2018**

அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

(ஒம்) ரா.மகேஸ்வரி,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்(கூ/பொ)
பவானி நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
பவானி நகராட்சி